This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# விக்ரம்

www.writersujatha.com

## அக்னிபுத்திரனை நீங்கள் சந்திக்குமுன்...

இந்தக் கதைக்கு ஆதாரமான, மிக ஆதாரமான சம்பவம் ஒரு செப்டம்பர் மாத மழை நாளில் சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் ஒரு பிற்பகலில் நடந்தது. விவரம் 'தினத்தந்தி' பேப்பரில் வந்திருந்ததை நீங்கள் கவனித்திருக்கலாம். அன்றைய தினம் மூன்று பேருக்குக் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. இருபத்தைந்து வருஷம் சிறைத் தண்டனை! அம் மூவரும் அந்தத் தண்டனையின் தீவிரத்தைப் பற்றி எதுவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. புராதனமான, காவி வண்ண கோர்ட்டுக் கட்டிடத்தில், உயர ஸீட்டிலிருந்து, கோர்ட்டைவிடப் புராதனமாகத் தோன்றிய நீதிபதி மந்திரம் போல் உச்சரித்த அந்தத் தீர்ப்பை அம் மூவரும் வாயில் ஏதோ மென்று கொண்டு கவனித்ததில் இருந்த அலட்சியம் அவர்கள் கெட்ட காரியர்கள், எந்தத் தேசத்தின் எந்தச் சட்டத்துக்கும் யோக்கியமாகக் கட்டுப்படாதவர்கள் என்பதைக் காட்டியது.

......இ.பி.கோ. பிரிவின் படியும் ஸீகஸ்டம்ஸ் ஆக்ட் காஃபிபோஸாஃபெரா, என்று பற்பல தரப்பட்ட சட்டப் பிரிவுகளையும் எடுத்துக்காட்டி நீதிபதியவர்கள்,

"குற்றவாளிகள் அஸராஃப் ஹுஸேன், பாபு என்கிற கமலாகர், பெர்னாண்டஸ் மூவருக்கும் தூதரக அதிகாரியைக் கடத்திச் சென்றதற்கும், கள்ளக்கடத்தல், போதைப் பொருள்கள் வியாபாரம் இன்னபிற குற்றங்களுக்கும் தலா இருபத்தைந்து வருஷம் கடுங்காவல் சிறைத் தண்டனையும் நாற்பத்தையாயிரம் அபராதமும், அதைக் கட்டாத பட்சத்தில் மேலும் மூன்று வருஷங்கள் அதிகப்படியாகச் சிறைத்தண்டனையும்......"

"தூத்," என்று பாபு துப்பினதை நீதிபதி நிமிர்ந்து பார்த்து முகம் கடுமையாகிச் சற்று அவசரமாகவே படித்தார். மூவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். மூவருக்கும் முப்பது வயதைத் தாண்டாத வயது. பெர்னாண்டஸ் என்பவன் இந்தியனா என்று சந்தேகமாக இருந்தது. (ஒருமாதிரி செம்பட்டை தாடி.) மூவரும் விருது கிடைத்ததுபோல் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கோர்ட்டுக்கு வெளியே இடி இடித்து மழை பெய்து கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் நிருபர்களும் காமிராக்காரர்களும் காத்துக் கொண்டிருந்தார்கள். டி.வி. காமிராமேல் குடை பிடித்துப் போர்த்தியிருந்தது. ஓர் ஆசாமி ஓடி வந்து, "இருபத்தஞ்சு வருஷம்," என்று சொல்ல, அந்த இடம் சற்றுப் பரபரப்பாகியது. "வராங்க! வராங்க," என்று ஒரு நிருபர் கட்டியம் கூற, கைதிகள் மூவரும் முகத்தில் விரோதம் பொங்க, ஒருவருடன் ஒருவர் விலங்குகளால் இணைக்கப்பட்டு சூயிங்கமோ என்னவோ மெல்வதை நிறுத்தாமல் விறுவிறுவென்று போலீஸ் வண்டியை நோக்கி நடக்க, நிருபர்கள் பளிச் பளிச்சென்று காமிராக்கள் கண் சிமிட்டலை விரும்பாமல் அவர்கள் முகத்தை மறைத்துக் கொண்டனர்.